**இரத்மலானை/ மொரட்டுவை மற்றும் ஜா-எல /ஏக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டம் - 2012**

---

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 2,108,357,551 ஆனதுடன் 2012 திசெம்பர் இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 12,590,791,893 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2012 ரூபா** | **2011 ரூபா** | **ரூபா** |
| நடைபெறும் வேலை | 2,108,208,551 | 2,887,743,493 | 12,473,409,298 |
| சொத்து, பொறி மற்றும் உபகரணம் | 149,000 | 3,312,011 | 117,382,595 |
| **மொத்தம்** | **2,108,357,551** | **2,891,055,504** | **12,590,791,893** |

## 3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 20,279,000 கிரயத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற நீரிறைக்கும் நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணி மற்றும் ரூபா 28,234,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 07 மோட்டார் வாகனங்கள் முறையற்ற விதத்தில் நடைபெறும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 126,965,293 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று வித்தியாசம் வெளிநாட்டு மானிய கணக்கிற்கு பதிலாக நடைபெறும் வேலைக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போதான | பயன்படுத்திய நிதிகள் - 2012 திசெம்பர் 31 வரையானது | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எஸ்ஐடிஏ - கடன் | 91.92 | 10,495 | 1,350 | 1,137 | 78.36 | 8,549 |
| - மானியம் | 5.98 | 683 | 150 | 205 | 5.31 | 624 |
| இலங்கை அரசாங்கம் | 44.86 | 5,122 | 1,082 | 653 | 25.69 | 3,028 |
| **மொத்தம்** | **142.76** | **16,300** | **2,586** | **1,995** | **109.36** | **12,201*** |

* மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான முற்பணங்கள் மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிராமையால் இந்த அறிக்கையின் 4 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வேறுபடுகின்றது.

செயற்திட்ட காலத்திற்குள் வெற்றிகரமான அமுலாக்கலை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த, காலாண்டு, அரையாண்டு முதலியவற்றில் குறித்த நிதி மற்றும் பௌதீக இலக்குகளை குறிக்கின்ற முழுச் செயற்திட்ட காலத்தையும் மேவுகின்ற விரிவான திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2. பௌதீக செயலாற்றல்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் செயற்திட்ட காலப்பகுதியின் 5 ஆண்டுகள் கடந்த பின்னர் முறையே 85.04 சதவீதம் மற்றும் 77.9 சதவீதமாக இருந்தது.

(ஆ) சுற்றுச்சூழல் சுகாதார கூறின் கீழான செயற்திட்ட நடவடிக்கைகள் உலக வங்கிக்காக நியமிக்கப்பட்ட ஆலோசனையாளரால் சுகாதார முறையின் பொருத்தப்பாடு மீதான மதிப்பாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியத்திலிருந்து 5 ஆண்டுகளின் பின்னரும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜா-எல/ ஏக்கல கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி தொடர்பில் சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ ஆபத்தல்லாத வழியில் சுத்திகரித்த கழிவு நீர் மற்றும் சாக்கடை அகற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 செப்தெம்பர் 24 இல் கணக்காய்வு பரிசோதனை திகதி வரையும் அத்தகைய முறைமை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்டமானது ஜா–எல மற்றும் இரத்மலானை பகுதிகளில் சாக்கடை முறைமைகளிற்காக விரிக்கப்படும் பொலி எதில்ன் குழாய்களில் குறைபாடுள்ளதாக செயற்திட்டத்தால் இனங்காணப்பட்டுள்ளதுடன், சாதாரண பொலித்தீன் குழாய்களை பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய குழாய்களை செய்யப்பட வேண்டுமென ஒப்பந்ததாரர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். 2014 செப்தெம்பர் 24 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் திகதியில் உள்ளவாறு மொத்தம் 10,833 மீற்றர்கள் நீளமுடைய குழாய்களில், 9,300 மீற்றர் நீளமுடைய குழாய்கள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தன.

**4.3. நிதிக் கட்டுப்பாடு தொடர்பிலான விடயங்கள்**

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட பதவியணியினருக்கான வேதனக் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்டிருந்ததுடன் வேதனக் கிரயத்தில் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 37,581,520 தொகை செயற்திட்டத்தின் நிர்வாக நோக்கத்திற்காக போதிய பதவியணியினரை சேர்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மேந்தலைகளாக செயற்திட்டத்திடமிருந்து சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆலோசனை சேவைகள் மீதான செலவினங்களை செய்வதற்கு மானியங்களின் கீழ் 2012 ஆம் ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளில் ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தரப்பினரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது அவற்றின் மீது ரூபா 205 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டமானது உப ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட ஆவணங்களை கூர்ந்து ஆய்வுசெய்வதற்காவும் அவற்றின் தேசத்தை கட்டியொழுப்பல் வரி கணப்பீட்டை மெய்மையாய்வு செய்வதற்காகவும் மேந்தலைக் கிரயமாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 5,189,064 தொகை செலுத்தியிருந்தது.

(ஈ) நிதிகளின் பயன்பாடு தொடர்பான தகவல்கள் உரிய அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் பதிவேடுகளுடன் செயற்திட்டத்தால் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை

என அவதானிக்கப்பட்டது, ஆதலால் செயற்திட்டத்தின் மானிய பொறுகைகளில் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 205.42 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.6 மில்லியன் நேரடிக் கொடுப்பனவுகள் உரிய அமைச்சு மற்றும் நிதி அமைச்சால் பதியப்பட்டிருக்கவில்லை என சான்றுபடுத்தப்பட்டது.

(உ) 2010 இல் ரூபா 62.80 மில்லியன் கிரயத்தில் சுமித்த மிதுடும்புர சாக்கடை பொறித்தொகுதிக்கு அண்மிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணியொன்றை சுவீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 1 ½ ஆண்டுகளிற்கு மேலாக தாமதப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், காணியின் பெறுமதி அதிகரித்ததன் விளைவால் ரூபா 13.27 மில்லியன் மேலதிக கிரயம் ஏற்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**4.5. நோக்கத்திற்கு சார்பற்ற செலவினங்கள்**

---------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்காத நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக நூலக புத்தகங்கள் மற்றும் மடி கணனிகள் கொள்வனவு செய்வதற்கு திரைப்படங்களை தயாரிப்பதற்கு மற்றும் திறப்பு விழாவிற்கான செலவினத்தை செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில் செயற்திட்டத்தால் ரூபா 2,718,536 ஆன தொகை செலவழிக்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது.